1979 மார்ச் 31]

ஏற்படுத்தி, இப்படி மூடப்பட்ட கால்நடை நிலையங்களை திறப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா? அதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு செல்வி பி.டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே, கிளை நிலையங்கள் திறப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கால்நடை ஆய்வாளர்களுக்கு போதிய அளவு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் அப்படி ஆய்வாளர்கள் இல்லாமல், வேக்சினேட்டர்கள் அந்தப் பணியினைச் செய்து கொண்டு வருகிறார்கள்.

கூத்தாநல்லூர் அரசு மருத்துவமனை.

*வினா எண். 576.—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், கூத்தாநல்லூர் அரசினர் மருத்துவமனையை விரிவாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தற்போது இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், கூத்தாநல்லூரில் அதிகமாக 20 படுக்கைகள் கொண்ட ஒரு பகுதி அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டு நீண்டநாட்களாக மக்கள் நல்வாழ்வுத் துறை செயலாளர் அவர்களுடனும் தொடர்பு கொள்ளப்பட்டு இருக்கிறது. அதற்கான முயற்சி என்ன எடுத்துக் கொள்ளப்பட்டது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனையை விஸ்தரிப்பதற்கு மேலும் ஒரு பகுதி கட்டப்பட வேண்டுமென்ற மக்களுடைய கோரிக்கை வரப்பெற்று, அதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது. ஏற்கனவே இருக்கின்ற படுக்கைகளோடு இன்னும் 12 படுக்கைகள் கொண்ட ஒரு பிரிவைக் கட்ட வேண்டுமென்று ஒரு செயற்குறிப்பு அனுப்பும்படி கேட்கப்பட்டு, இயக்குநர் அப்படி அனுப்பி வைத்தார் என்றாலும், 1979–80 ஆம் ஆண்டுக்கான பகுதி திட்டமாக அது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்ற நோக்கத்திலே நிதிநிலை சரியாக இல்லாத காரணத்தால், முதன்மை வரிசையிலே அது இடம் பெறவில்லை.